நாள் 06.06.2023 Mcop .NO.110/2021 ம.சா.1 அந்தோணிபொன்ராஜ்

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் தற்போது வேலை செய்யவில்லை வீட்டில் தான் இருந்து வருகிறேன் . அதற்கு முன்பு நான் பால் வியாபாரம் செய்து வந்தேன். சொந்த பாலமாட்டு வியாபாரம் இல்லை. விபத்திற்கு முன்பு நான் பெற்ற வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் டி.என்.76ஏஏ0209 என்ற இருசக்கர வாகனம் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தம்பி 1ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்டது ஆகும். விபத்து சமயத்தில் நான் தான் இருசச்கர வாகனத்தை ஒட்டி சென்றேன் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக காவல்நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனக்கு எதிரே மோதிய வாகனம் யார் என்று தெரியாது என்று தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில்எனக்கு சொந்தமான டி.என்.76ஏஏ0209 என்ற இருசக்கர வாகனம் என்று தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த மனுதாக்கல் செய்தபிறகு தான் மேற்படி வாகனம் என் தம்பி வாகனம் என்று சொல்லுகிறேன் என்றாலும் என் தம்பியிடம் இருந்து வண்டியை வாங்கி பெயர் மாற்றம்செய்யாமல் பயன்படுத்தி விபத்து ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் கிடையாது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாருக்கு கீழ் நான் வேலை செய்ததாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் ரைடர் என்ற சமயத்தில் ஒட்டி விபத்தை ஏற்படுத்தியதால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. ரைடருக்கான பிரிமீயத்தை 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு கழகத்தில் கட்டவில்லை என்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு ஒட்டுனர் உரிமம் இருந்தது. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியள்ள இழப்பீடு தொகை

அதிகமானது என்றால் சரியல்ல. விபத்து என் அதிவேகம் மற்றும் அஜாக்கிரையதாக நடந்தது என்றாலும் அதைமறைப்பதற்காக நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.